பக்கங்கள்:-24

# காலை முரசு

## சகல குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவார்களா?

### சத்தியலிங்கம் எம்.பி. கேள்வி



"பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காலகட்டத்தி 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 28 | வெள்ளிக்கிழமை | 11.04.2025 | அதிர்வு 249



# ஈஸ்டர் தாக்குதல்களுடன் பிள்ளையானுக்குத் தொடர்பு

## குற்றவாளிகள் எவரும் தப்பவே முடியாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**"உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனைத் தொடர்புபடுத்தும் கணிசமான தகவல்கள் உள்ளன. இது தொடர்பில் விசாரணைகள் நடந்து வருகின்றன. எந்தவொரு குற்றத்தையும் மறைக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். எந்தவொரு குற்றவாளியும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க மாட்டோம்."**

**- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.** 06






இலங்கையின் ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா விதித்த வரிகள் குறித்து விவாதிப்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா தலைமையில் அனைத்துக் கட்சி மாநாடு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அரசுத் தரப்பினர் மற்றும் எதிர்க்கட்சி தரப்பினர் பெரும்பாலும் ஒன்று பட்டு நின்று கருத்துத் தெரிவித்தனர். அது பலராலும் ஆரோக்கியமாகப் பார்க்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி இராசமாணிக்கம் சாணக்கியன் ஒரு விடயத்தில் மட்டும் மற்ற தரப்பினர்களோடு உடன்படாமல் தனித்து நின்றார்.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழக்கக் கூடிய ஆபத்து இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், ஐரோப்பிய ஒன்றிய எதிர்பார்ப்பின்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விரைந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். பொதுவாக அதற்கு ஜனாதிபதி உட்பட எல்லோரும் 06



# மஹிந்த, ரணிலை உங்களால் முடிந்தால் கைது செய்யுங்கள்

## அநுர அரசுக்கு சாமர சம்பத் சவால்

**முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை முடியுமானால் கைது செய்து பாருங்கள் என்று புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“இந்த அரசு ரணில் விக்ரமசிங்கவின் ஒரு முடியையேனும் அசைக்கப் போவதில்லை. பட்டலந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தாலும் இதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை.

திமிங்கிலங்களை விட்டுவிட்டு நெத்தலி மீன்களையே இந்த அரசு பிடிக்கின்றது. இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் நான் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். மற்றையவர்களான பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் மேர்வின் சில்வா ஆகியோர் தோல்வியடைந்தவர்கள். அவர்களை விடுத்து வேறு அதிகாரம் கொண்ட எவரையும் கைது செய்ய முடியவில்லை.

இப்போது பட்டலந்த தொடர்பில் கதைக்கின்றனர். பதுளை பொரலந்தலவிலும் முகாமொன்று இருந்தது. அங்கு இருந்த ஆட்காட்டும் தலையாட்டி பொம்மை யார்? இந்த அரசின் அமைச்சரே இருந்துள்ளார். பெரும் சித்திரவதைகளைச் செய்த முகாமாகும். அங்கு இருந்த தலையாட்டி பொம்மை தற்போது அரசில் இருக்கின்றது.

அத்துடன் வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணப் பொதி தொடர்பில் கூறினர். அதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பொதியைக் காணவில்லை. மக்களை ஏமாற்றுகின்றனர். தேர்தல் அறிவிக்கப்படும் எனத் தெரிந்தே அரசு இவ்வாறு செயற்பட்டது. புத்தாண்டு முடிந்த பின்னர் அந்த நிவாரணப் பொதி மீண்டும் வழங்கப்படுவதில்லை. மீண்டும் மாகாண சபைத் தேர்தல் நெருங்கும்போது நிவாரணப் பொதி வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு என்ன நடந்துள்ளது என எங்களுக்கே தெரியும். பட்டலந்தவால் நீங்களே பிரச்சினைகளை இழுத்துப் போட்டுக்கொண்டுள்ளீர்கள். இந்த அரசால் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரை ஒன்றும் செய்ய முடியாது. முடியுமானால் கைது செய்து பாருங்கள்.

இந்த அரசு மக்கள் விடுதலை முன்னணியுடையது என்பதனை மறந்து அந்தக் கட்சிக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை மறந்து புதிய பயணத்தையே மேற்கொள்கின்றது. இப்போது அமெரிக்கா வரி அதிகரிப்பைச் செய்தது. பின்னர் 90 நாட்களுக்கு அதனை இடைநிறுத்தியுள்ளது. மக்களின் அதிர்ஷ்டத்தால் இவ்வாறு அதனை ட்ரம்ப் இடைநிறுத்தியுள்ளார். இல்லையென்றால் நிலைமைகளைப் பார்த்திருக்கலாம். இவர்களால் எதுவும் முடியாது.” – என்றார்.



### பட்டலந்த வதை முகாம் விவகாரம்:

# சட்டத்தின் பிரகாரம் ரணிலுக்கு எதிராக உரிய நடவடிக்கை

## சபையில் அமைச்சர் சமந்த வித்யாரத்ன உறுதி

**“ஜே.ஆர்.ஜயவர்த்தன அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதைப் போன்றுதான் அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார். அதன் பெறுபேறுதான் பட்டலந்த சித்திரவதை முகாமாகும் அவ்வாறிருக்கையில், 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை எமது கணக்கில் வைப்பிலிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். எவரையும் பழிவாங்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது . உண்மை நிச்சயம் வெளிவரும். சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.”**

**- இவ்வாறு பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

“பட்டலந்த சித்திரவதை முகாமில் பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கவாதிகள் உட்படப் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இது வெறும் அறிக்கையல்ல, இலங்கையின் ஹிட்டலர் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாதத்தை அரச பயங்கரவாதம் என்றே அழைக்க வேண்டும்.

பட்டலந்த வீட்டுத் தொகுதிக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இளைஞர்களின் இரத்தம் மற்றும் உடலை ரணில் விக்கிரமசிங்க நிலத்துக்கு உரமாக்கினார். இந்தச் சித்திரவதை முகாமைப் போன்று நாடு முழுவதும் அரச ஆதரவுடன் பல சித்திரவதை முகாம்கள் காணப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சித்திரவதை முகாம்களுக்குத் தலைமை தாங்கினார்கள்.

உண்மைக்காகப் போராடியே பலர் உயிர்த் தியாகம் செய்தார்கள். அநீதியாகக் கொல்லப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதியை நாங்கள் பெற்றுக்கொடுப்போம். பட்டலந்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பட்டலந்த விவகாரத்தை மக்கள் விடுதலை முன்னணிப் பக்கம் திருப்புவதற்கு ரணில் மேற்கொண்ட முயற்சிகள் அவருக்கே எதிராகத் திரும்பியுள்ளது.” – என்றார்.


விடா முயற்சி விஸ்வரூப வெற்றி
பிரபல தென்னிந்திய பாடகர்
அந்தனி தாசனுடன்
Sawadeeka
MEGA
MUSICAL NIGHT
அதிரடி இசைக் கொண்டாட்டம்
ஏப்ரல் 12
இரவு 07.00
அனுமதி இலவசம்
வல்வெட்டித்துறை
ரேவடி கடற்கரையில்
ஏற்பாட்டு உதவி
• யாழ்ப்பாண கபடி சங்கம்
• வாழ்வை விளையாட்டு கழகம்.
Media Sponsors

# 250 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் திட்டமிட்டபடி நடைபெறும்

250 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் திட்டமிட்டபடி மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஜெனரல் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விசாரணைக்குப் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாதகமாகக் கருத்து வெளியிட்டனர்.

ஏற்றுமதி – இறக்குமதி தொடர்பான தீர்வைகள் மற்றும் செஸ் வரி போன்ற வற்றை ஒழுங்குபடுத்த வேண்டியமை தொடர்பாக அவர் தெரிவித்த கருத்தும் கூட்டத்தில் ஊன்றிக் கவனிக்கப்பட்டது.

ஆயினும், இந்த அமெரிக்க வரிப் பிரச்சினையை ஒன்றுபட்டு எதிர்கொள்வோம் என்ற சாரப்பட எதிர்க்கட்சிகள் தரப்பில் திலித் ஜயவீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்திற்கு மற்ற எல்லா கட்சிகளும் இணக்கம் தெரிவித்த போதிலும், தமிழரசுக் கட்சி அதற்கு இணங்காது என்று சாணக்கியன் தெரிவித்தார் என அறிந்து கொண்டேன்.

ஏன் அவர் அப்படி நடந்து கொண்டார் என்று அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டேன்.

"அந்த கடிதத்தின் உள்ளடக்கங்கள் குறித்து கட்சித் தலைவர் சிவஞானத்துடனும், செயலாளர் சுமந்திரனுடனும் கலந்தாலோசித்தேன். இந்த பிரச்சினையை – அமெரிக்க வரி விதிப்பை – ஒரு தேசமாக ஒன்றுபட்டு எதிர்கொள்வோம் என்ற சாரப்பட இருக்கின்ற வாசகங்கள் எங்களுக்கு ஏற்புடையனவாக இருக்கவில்லை. தமிழர் தேசக் கோட்பாட்டுக்கு அது முரணாக தென்பட்டதனால் அதற்கு அங்கேயே என் எதிர்ப்பை தெளிவு படுத்தினேன்." – என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில் அரச – எதிரணித் தரப்பினர் இடையில் மிகுந்த அந்நியோன்னியம் வெளிப்பட்ட நிலையில், கூட்டத்துக்குப் பின்னர் எதிரணி எம்.பிக்கள் சிலர் ஜனாதிபதியோடு மிக நெருக்கமாக அமர்ந்து உரையாடினர். அச்சமயம் நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பில் சபை முதல்வரான பிமல் ரத்நாயக்கா பண்ணும் அட்டகாசங்களை அவர்கள் ஜனாதிபதிக்கு விவரமாக எடுத்துரைத்தனர். ஜனாதிபதி சிரித்துக் கொண்டு – அதே சமயம் கவலை தோய்ந்த கருத்தில் – அவற்றை உள்வாங்கினார் எனத் தெரியவந்தது.

\+ + +

உள்ளூராட்சித் தேர்தலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட சுமார் 80க்கும் அதிகமான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு மேன் முறையீட்டு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ள பின்னணியில், அதற்கு எதிராகத் தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் என்று கூறப்பட்டது. ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த வரிசையில் முதல் உத்தரவுகளை வழங்கி ஏறத்தாழ ஒரு வாரம் கடக்கும் நிலையில் கூட, இன்னமும் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவில்லை. குறைந்தபட்சம் இன்றாவது செய்வார் எனத் தேர்தல் ஆணையம் நம்பிக் கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு முரணான விதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இப்போது உத்தரவுகளை வழங்கியிருப்பதாகச் சட்டவட்டாரங்கள் கூறுகின்றன.

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் இரண்டு விடயங்களைச் சுட்டி காட்டி இருக்கின்றது.

ஒன்று – இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்தும் பிறப்புச் சான்றிதழ் பிரதேச செயலகங்களின் பதிவாளர்களினால் உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட மூலப் பிரதியாக இருக்க வேண்டும் என்பது.

அடுத்தது – ஆவணங்களை சான்றுரைப்பது தொடர்பான சட்ட விதிகள் முழு அளவில் தவறாமல் பின்பற்றப்பட்டு இருக்க வேண்டும் என்பது.

இப்போது மேன்முறையீட்டு நீதி மன்றம் ஏற்கும்படி உத்தரவிட்ட வேட்பு மனுக்கள் பலவும் இந்த இரண்டின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட பெரும்பாலும் சாத்தியங்கள் உண்டு என்று கருதப்படுகின்றது.

நேற்று வரை மேன்முறையீட்டு நீதி மன்றம் ஏற்கும் படி கூறிய வேட்பு மனுக்கள் அனைத்தும் தொடர்பிலும் உயர் நீதி மன்றத்தில் ஒரே அடியாக விண்ணப்பித்து அந்த மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுகளை இடைநிறுத்தி, உயர் நீதி மன்றக் கட்டளையை சட்டமா அதிபர் திணைக்களம் பெற முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது நீதிமன்ற விடுமுறையாயினும் சட்டமா அதிபர் விண்ணப்பித்தால், உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவர் தம்முடைய சேம்பரில் வைத்தே மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிரான தடை உத்தரவுகளை பிறப்பிக்க முடியும் என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆயினும், அஞ்சல் வாக்குகள் அளித்தல் மற்றும் வாக்களிப்புக்கு நாள் நெருங்கி வருகையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு பிரதேச சபைத் தேர்தலுக்கும் வாக்குச் சீட்டுகளை மாற்றி, அச்சிட்டு, அந்தக் குறுகிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகின்றது.

அதனால் தேர்தல் வழக்குச் சிக்கலில் மாட்டியிருக்கும் சுமார் நூறு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் மே 6ஆம் தேதி நடைபெறுவது பெரும்பாலும் சாத்தியமில்லை என்று தெரிகின்றது. நீதி மன்றச் சர்ச்சை முடிந்து, அவற்றுக்கான தேர்தல்களைப் பிறிதொரு திகதியில் நடத்த வேண்டியிருக்கும். அதுதான் நிலைமை....!

\+ + +

நேற்று இரவு காரைநகர் பக்கத்தில் இருந்து நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பில் கரித்துக் கொட்டினார்.

"எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள். கோட்டா அரசும், மஹிந்த அரசும், அநுரா அரசும் எல்லாம் ஒரே மாதிரித்தான்" – என்று சினந்தார் அவர்.

என்ன, ஏது என்று விசாரித்தேன்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று வடக்கே வருகிறார். அவர் காரைநகர் பகுதிக்கும் செல்வார் என்று கூறப்படுகின்றது. அதனால் பிரதமரின் வருகையை முன்னிட்டு காரைநகர்ப் பகுதி வீதிகளுக்கு அவசர அவசரமாகத் தார் பூசப்படுகிறது.

முன்பு மஹிந்த வருகின்றார், கோட்டா வருகின்றார் என்றால் அவசரமாக வீதிகள் திருத்தப்படும். குண்டு, குழிகள் நிரவப்படும். லைட் போடப்படும். சுத்தம் செய்யப்படும் என்று முன்னர் நையாண்டி பண்ணியவர்களே இப்போது அந்த வேலையைச் செய்கின்றார்கள் என்றார் அந்த நண்பர்.

காரைநகர், வேலணைப் பகுதிகளுக்கு பிரதமர் வருகிறார் என்பதால் அந்தப் பகுதி வீதிகளின் கிடங்குகளுக்கு அவசர அவசரமாக சல்லி கொட்டி, தார் பூசப்படுகின்றது என்றார் அந்த நண்பர்.

பிரதமரின் ஒரு நாள் வருகைக்காக நடத்தப்படும் இந்த வெளிப்பூச்சு வேலை எத்தனை நாள்களுக்குத் தாக்குப் பிடிக்கும் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"பட்டலந்த விவகாரத்தில் ஒருசில விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டுக்கொண்டு ஒட்டுமொத்த சம்வத்தையும் மறக்க முடியாது. 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மக்களின் தேர்தல் உரிமை கொள்ளையடிக்கப்பட்டு, யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இதன் பின்னரே 30 வருடகால யுத்தம் தோற்றம் பெற்றது. 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் தூண்டிவிடப்பட்டது. இதன் பின்னர் மக்கள் விடுதலை முன்னணி தடை செய்யப்பட்டது.

ஜே. ஆர். ஜயவர்த்தன – பிரேமதாச அரசு இந்த நாட்டின் இளைஞர்களைப் படுகொலை செய்தது. இதில் பிரதான ஒன்றாகத்தான் பட்டலந்த சித்திரவதை முகாம் உள்ளது. எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் இந்த சித்திரவதை முகாம் மற்றும் படுகொலையை நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையை போன்று அதனுடன் இணைந்த நான்கு பிரதான அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சமீபத்தில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானைக் குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய்தனர். அவர் தற்போது தடுப்புக் காவலில் உள்ளார். உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் சம்பவத்துடன் அவரைத் தொடர்புபடுத்தும் கணிசமான தகவல்கள் உள்ளன. இது அவரது ஈடுபாட்டைக் குறிக்கின்றது. விசாரணைகள் நடந்து வருகின்றன. எந்தவொரு குற்றத்தையும் மறைக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். எந்தவொரு குற்றவாளியும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க மாட்டோம். நாட்டில் சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டுவது கட்டாயமாகும். நீதி மேலோங்க வேண்டும். இதை அடையத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்." – என்றார்.

## சகல குற்றவாளிகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லேயே அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடந்த பல குற்றச் செயல்களைத் தடுத்திருக்கலாம். எனவே, பட்டலந்த விசாரணை அறிக்கையை விவாதிப்பது மட்டுமன்றி அறிக்கையில் குற்றவாளிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிரான முறையான விசாரணைகளை நடத்த வேண்டும். அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

07

# அதிகரிக்கப்பட்ட சம்பளம் பிறிதொரு நாளில் கிடைக்கும்



அரச ஊழியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை நேற்று வழங்க முடியாத நிறுவனங்களுக்கு சம்பளத்தின் நிலுவைப்பணத்தை வழங்குவதற்காக பிறிதொரு திகதியை அறிவித்து சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டாரவினால் இந்த சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டது.

அரச ஊழியர்களுக்கான திருத்தப்பட்ட சம்பளம் நேற்று வழங்கப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை நேற்று வழங்க இயலாத நிறுவனங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போதுள்ள சம்பளத்தை செலுத்த வேண்டும்.

புதிய சம்பள திருத்தத்திற்கமைய நிலுவைத் தொகையை எதிர்வரும் 25 ஆம் திகதி செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் எதிர்வரும் ஜூலை முதல் வழங்கப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

2020 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு அடுத்த வருடத்தில் ஓய்வூதியம் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

## கைத்துப்பாக்கியுடன் வர்த்தகர் ஒருவர் கைது



மைக்ரோ ரக கைத்துப்பாக்கியுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒருவரை வழியனுப்பி வைப்பதற்காக சென்ற போதே மேற்படி வர்த்தகர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த 41 வயதான நபர் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு வடக்கு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## 15 ஆம் திகதி அரச விடுமுறையில்லை

எதிர்வரும் 15ஆம் திகதி அரச விடுமுறை தினமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் பெரிய வெள்ளியை முன்னிட்டு அந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

வேலை செய்வதற்கு 03 தினங்கள் மாத்திரமே உள்ளது என்பதால் 15 ஆம் திகதியை விடுமுறை தினமாக அறிவிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கப்பட்டவில்லை என பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## சகல குற்றவாளிகளும்...

(6ஆம் தொடர்ச்சி...)

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

“எமது நாட்டில் இடம்பெற்ற பாரதூரமான கொலைகள் தொடர்பான குற்றங்கள், நீதித்துறைக்கு விரோதமான கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவை போன்ற பல விடயங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கை 35 ஆண்டுகளுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல அறிக்கைகள் வடக்கு மற்றும் கிழக்கில் நிலவிய யுத்த காலத்தின் போதும், மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சிக் காலத்தின் போதும், நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான யுத்தக் குற்றங்கள் போன்ற பல விடயங்களைக் கொண்ட பல்வேறு அறிக்கைகள், பட்டலந்த அறிக்கையைப் போன்று பல வருடங்களாக ஆராயப்படாமல் களஞ்சியங்களில் இருக்கின்றன.

இவ்வாறான அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவந்து அவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு அதனை அப்படியே கைவிட்ட வரலாறுகள் உள்ளன. அதனால் இந்த அறிக்கையை விவாதிப்பது மட்டுமன்றி அறிக்கையில் குற்றவாளிகளாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிரான முறையான விசாரணைகளை நடத்த வேண்டும். அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அவர்களைப் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். இந்தப் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான குற்றங்கள் மீள ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிப் பகுதியில் இதேபோன்று மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், நீதிக்கு புறம்பான கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள் வீடு திரும்பாமை, போர்க் குற்றங்கள் போன்றவை பல அறிக்கைகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், அந்த அறிக்கைகளை எடுத்து நடவடிக்கை எடுக்கும் போது நாட்டுக்காகப் போராடியவர்களைக் காட்டிக்கொடுப்பதாக இங்குள்ள அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

எத்தனை அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருகின்றோம் என்பதில் பிரச்சினையில்லை. ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாக இருந்திருந்தால், யுத்தத்தின் இறுதிப்பகுதியில் போர்க்குற்றங்களைச் செய்தவர்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்தோர் பயத்திலேயே அதைச் செய்திருக்க மாட்டார்கள்.

எவ்வாறாயினும் அறிக்கைகளில் உள்ள முடிவுரைகளுக்கமைய சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதன் ஊடாக நாட்டில் இவ்வாறான குற்றங்கள் மீள நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது.

நாங்கள் அரசியல் காரணங்களுக்காக மட்டும் இந்த அறிக்கைகளைப் புரட்டாமல், இந்த நாடு ஒரு அமைதியான எல்லா மக்களும் வாழக் கூடிய நாடாக மாற வேண்டுமாக இருந்தால் இந்த ஆணைக்குழு அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த இந்த அரசாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நல்லவற்றுக்காக இணைவோம்!

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிரடியாக 44 வீதவரி விதித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விடுத்த அறிவிப்பால் எழுந்துள்ள நெருக்கடியை எதிர்க்கட்சிகளையும் அரவணைத்து ஒரே நாடாக இலங்கை எதிர்கொள்வதற்கான முன் முயற்சிகளை அநுரகுமார திஸநாயக்காவின் அரசு மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா நேற்று கொழும்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்தினார்.

அவருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி இந்த விடயத்தை ஐக்கியப்பட்டு எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் முழு அளவில் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்புக்கு இணங்கப் புதிய வரி விதிப்பை நடைமுறைப்படுத்துவது இப்போது 90 நாள்களுக்குப் பிற்போடப்பட்டிருக்கின்றது. இந்த இடைக்கால அவகாசத்தில் நிலைமைகளைக் கண்காணித்து. உரிய ஆலோசனைகளை முன்வைக்க ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழுவை அமைப்பதற்கு நேற்றைய சர்வ கட்சி மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இணக்கம் தெரிவித்தார் என்று அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஆழிப் பேரலை தாக்கிய போது ஏற்பட்ட நெருக்கடியையும், கொரோனா கால நெருக்கடியையும் எதிர்கொள்வதற்கு இவ்வாறு ஆளும் தரப்பும் எதிர் தரப்பும் ஒன்றிணைந்து செயல்பட முன் முயற்சிகள் எடுக்கப்பட்டனவாயினும் அவை அந்தச் சமயத்தில் தொடரவில்லை. ஆனால் இப்போது இந்த முயற்சியை ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் சேர்ந்து முன்னெடுத்து, அமெரிக்க வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள சவாலை எதிர்கொள்வதற்கு முழு அளவில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா, அரசாங்கம் மற்றும் பிற எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனான நேற்றைய கலந்துரையாடல்களை பயனுள்ளவை என விவரித்தார். அமெரிக்க வரிகளின் சவால்களுக்குப் பதிலளிப்பதில் ஒருமித்த கருத்து இருப்பதாகக் கூறிய அவர், “ஜனாதிபதி எங்கள் கருத்துக்களை மதித்தார். நாங்கள் மிகவும் பயனுள்ள கலந்துரையாடலை நடத்தினோம்” என்று ஊடகங்களுக்குக் கூறினார்.

இந்த நெருக்கடியை எதிர் கொள்வதில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கும் எதிர்க்கட்சியின் திட்டங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கூறினார்.

“முதலீடுகள், சந்தைகள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற சில விஷயங்களில் நாங்கள் உடன்பட்டுள்ளோம் என்று தெரிகிறது.” என்று அவர் கூறினார்.

பொது எதிரியின் அழுத்தத்தை எதிர்கொள்ள தத்தமது அரசியலை மறந்து ஆளும் - எதிரணித் தரப்பினர் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வந்தமை ஆரோக்கியமான விவகாரமே.

# நாளை முதல் மூன்று நாள்களுக்கு மதுபான நிலையங்களுக்கு பூட்டு




எதிர்வரும் 12, 13 மற்றும் 14ஆம் திகதிகளில் நாடு முழுவதிலுமுள்ள மதுபானசாலைகளை மூடுமாறு மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நாள்களில் பூரணை, மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு வருவதால் மதுபானசாலைகள் மூடப்பட்டு இருக்கும் என மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தை மீறும் மதுபானசாலைகள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மதுவரி திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.










# அமெரிக்க வரிக் கொள்கை பற்றி ஆராய ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கட்சித் தலைவர் கூட்டம் வெற்றிகரமாக நிறைவு

அமெரிக்காவின்புதியவரிக்கொள்கை இலங்கைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பாகவும் அது தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பரிந்துரைகள் குறித்தும் ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, ஜனாதிபதி இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கைக்கு ஏற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பான விடயங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்தும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான பரிந்துரைகளைத் தயாரிப்பது மற்றும் ஏற்றுமதி இலக்குகளை பல்வகைப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் என்பவற்றை ஒன்றிணைத்து கட்சித் தலைவர்களுடன் தொடர்ந்து ஆராயவும் இதன் போது முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தமிழ் தேசியக் கூட்டணி சார்பில் எஸ். ராசமாணிக்கம்,புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக, தமிழ் முற்போக்கு கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் பழனி திகாம்பரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி ரிஷாத் பதியுதீன், சர்வஜன பலய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, சுயோட்சைக் குழு 17 சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. அர்ச்சுன ஆகியோர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, காவிந்த ஜயவர்தன, எஸ்.எம்.மரிக்கார், காதர் மஸ்தான் ஆகியோரும் பங்கேற்றனர்.





# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

4மாவட்டங்களுக்குமுதலாம்கட்டமண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும், மண்சரிவு ஏற்படும் பகுதிகளை அண்டியவர்கள் வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்



பண்டிகை காலத்தில் தூரப் பிரயாணங்களை மேற்கொள்வோரின் வசதி கருதி, விசேட போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 500 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், 40 ரயில் சேவைகள் மேலதிகமாக சேவையில் இணைக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து, பதுளை, பெலியத்த, திகோணமலை, கண்டி, அனுராதபுரம் மற்றும் காலி ஆகிய நகரங்களுக்கு இந்த விசேட ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.



# பஸ் ஆசன முன்பதிவு இடைநிறுத்தப்பட்டது

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பயணிகளுக்காக ஆசனங்களை முன்பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முன்பதிவு நடவடிக்கை இடைநிறுத்தப்படவுள்ளது.

பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனைத்தவிர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத்தில் பஸ்கள் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சாரதியொருவரின் கடமை நேரம் 14 மணித்தியாலங்களுக்கு மேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றுமொரு சாரதியை பணிக்கமர்த்த வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து பஸ்களை விசேட சுற்றுலாப் பயணங்களுக்கு ஈடுபடுத்துவதும் புத்தாண்டு காலப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளது.

# பிம்ஸ்டெக் விவசாய மாநாட்டை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு

2027ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் (BIMSTEC) விவசாய மாநாட்டை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு கிட்டியுள்ளது.

நேபாளத்தின் காத்மாண்டு நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாய மாநாட்டின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த மாநாட்டில் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன நிகழ்நிலை ஊடாக பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

tamil one HD TV

# சித்திரை கோடைத்திருவிழா 2025

**வட மாகாண ஆண், பெண் அணிகளுக்கான கபடி போட்டிகள், சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள், மற்றும் அதிரடி இசை நிகழ்ச்சி!**

**இடம்** வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை

**ஏப்ரல் 12**
Beach கபடி முதல் சுற்றுப்போட்டிகள்

**ஏப்ரல் 12** - இரவு 07:00 மணிக்கு
தென்னிந்திய பாடகர்களுடன் மாபெரும் இசை நிகழ்சி

**ஏப்ரல் 13** - காலை 06:00 - மாலை 06:00
- ஆண், பெண் கபடி இறுதி போட்டிகள்
- பாரம்பரிய மற்றும் சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள்

**கோடை திருவிழாவை கொண்டாட அனைவரையும் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைக்கு அன்புடன் அழைக்கிறோம்!**

ஏற்ப்பாட்டு உதவி
- யாழ்ப்பாண கபடி சங்கம்
- வாழ்வை விளையாட்டு கழகம்.

**Media Sponsors**
சக்தி | VIRAKESARI வீரகேசரி | tamil one TV | a one | முரசு

# வடக்கில் காடுகளைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பதையே எதிர்க்கின்றோம்

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு




"காடுகளை அழிப்பது எங்கள் நோக்கமல்ல. காடுகளைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பது மற்றும் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதையே எதிர்க்கின்றோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

சுற்றாடல்துறை பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி மற்றும் காணி, நீர்ப்பாசனத்துறை பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றின் பாதுகாவலர் நாயகங்கள், காணி ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களும் இதில் பங்கேற்றனர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் இ.சந்திரசேகர், வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காணி, நீர்ப்பாசனத்துறை பிரதி அமைச்சர், வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினை குறிப்பாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே கூட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர் வனவளத் திணைக்கள பாதுகாப்புநாயகம் வடக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் விவரித்தார்.

குறிப்பாக முன்னைய ஆட்சியில் இது தொடர்பில் விசேட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும், வவுனியா மாவட்டச் செயலர் தவிர்ந்த ஏனைய மாவட்டச் செயலர்கள் அதனை முழுமைப்படுத்தவில்லை என்றும் குற்றம் சுமத்தியிருந்தார்.

அத்துடன் வனவளத் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் முன்னெடுத்த முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளை முழுமையாக நியாப்படுத்தியிருந்தார்.

அவரது கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் நிலைப்பாட்டை முன்வைத்தார்.

மிக நீண்ட காலப் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களது காணிகள் ஆள்நடமாட்டம் அற்ற நிலையில் அவையே காடுகளாக வளர்ந்துள்ளன என்றும், அவற்றைக் கூகுள் வரைபடம் மூலமே வனவளத் திணைக்களம் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக அடையாளப்படுத்தி 2012ஆம் ஆண்டின் பின்னர் அரசிதழ் வெளியிட்டுள்ளன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசிதழ் வெளியிடப்பட்டவை தொடர்பில் எந்தக் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை மாத்திரம் பயன்படுத்தி, கள அலுவலர்களுக்கும், பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் தெரியாமலேயே அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது என்றும், அதுவே தற்போதுள்ள சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது எனவும் தெளிவுபடுத்தினார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிட்ட அரசிதழ்களில் குறிப்பிடப்படும் பகுதிக்குள் மக்கள் முன்னர் வாழ்ந்தமைக்கான கட்டடங்களின் எச்சங்கள், கிணறுகளின் எச்சங்கள், வயல்கள் செய்தமைக்கான அடையாளங்கள் என்பன இப்போதும் காணப்படுகின்றன என்றும், அவை மக்களின் வாழ்விட மற்றும் வாழ்வாதார நிலங்கள்தான் என்பனவற்றுக்கு இவை சிறந்த சான்று எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதால், மக்களின் வாழ்வாதாரம், குடியேற்றம் என்பன மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளும் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தாலும் அதற்கு தீர்வு காணப்படாமல் இழுதடித்துச் செல்லப்படுகின்றது என விசனத்துடன் குறிப்பிட்ட ஆளுநர், மக்களின் காணிகளையும், அபிவிருத்திக்குத் தேவையான காணிகளையும் விடுவிப்பதே தீர்வாகும் என்பதையும் அதனை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஆளுநரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் இ.சந்திரசேகர், "ஆளுநர் குறிப்பிட்ட விடயங்கள் மிகச் சரியானது. இந்த விடயங்களால் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வனவளத் திணைக்களம் முன்வைத்த காலை எப்படி பின்வைப்பது என்று யோசிக்காமல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செயற்பட வேண்டும்." – என்று அறிவுறுத்தினார்.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றுக்கு எதிராக மிகக் காட்டமான கருத்துக்களை முன்வைத்தார்.

"வவுனியா மாவட்டத்துக்கு சிங்கள மாவட்டச் செயலர் இருக்கின்றார். அந்த மாவட்டத்துக்கு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக சிங்களவரான நான் இருக்கின்றேன். அப்படியிருக்கையிலேயே எனக்குத் தெரிந்து மடுகந்த குளத்தின் கீழ் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்த காணிகளை விடுவிப்பதற்கு மறுக்கின்றது. அது மக்கள் வயல் செய்த காணிகள். சிங்களவர்களுக்கே இவ்வாறான நிலைமை என்றால் தமிழ் மக்களின் நிலைமை சொல்லத் தேவையில்லை. இந்த நாட்டில் போர் உருவாகுவதற்கு காணிப் பிரச்சினையும் பிரதான காரணம் என்பதை மறவாதீர்கள்." – என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலர்கள் ஒவ்வொருவரும் தமது மாவட்டத்தில் இந்த இரு திணைக்களங்களாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பட்டியலப்படுத்தினர்.

முன்னைய ஆட்சியில் விடுவிப்பதற்கு தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் 10 சதவீதத்தையே விடுவிக்க இணங்கியமையும் சுட்டிக்காட்டிய அவர்கள் அது போதாது எனவும் குறிப்பிட்டனர்.

இதற்கு மேலதிகமாக, விடுவிக்க இணங்கியதைவிட பல காணிகளை புதிதாக காடுகளாக அரசிதழ் வெளியிடுவதற்கு வனவளத் திணைக்களம் கோரியிருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதனாலேயே முன்னைய ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் இணங்கிச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வவுனியா மாவட்ட செயலர், கடந்த ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக இருந்தவரது அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தான் செயற்பட்டதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் மக்கள் தினமும் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பட்டியல்படுத்தியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனும் மேலதிக விடயங்களைத் தெரியப்படுத்தினார்.

வடக்கில் மிகப்பெரும் பாரதூரமான விடயமாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் செயற்பாடுகள் இருப்பதை ஏற்றுக்கொண்ட சுற்றாடல் துறை பிரதி அமைச்சர், இது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகக் குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதியின் செயலருடன் இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலை நடத்துவது பொருத்தமாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம், ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற வகையில் ஜனாதிபதியுடன் சந்தித்து அவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லலாம் எனவும் பிரதி அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் மாவட்டச் செயலர்களால் தமது மாவட்டங்களில் விடுவிப்பதற்கு கோரிக்கை முன்வைத்த காணிகளை மீளவும் களப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# பட்டலந்த வதை முகாம் சூத்திரதாரிகள் நிச்சயம் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும்

## சபையில் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்து



"1977 முதல் 1994 ஆம் ஆண்டு வரை இந்த நாட்டைக் கொலைக் களமாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி பாவிகளே, பட்டலந்த வதை முகாமின் சூத்திரதாரிகளும் கூட. எனவே, பட்டலந்த வதை முகாமின் பின்னணியில் இருந்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தினார்.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"நல்ல வழியில் நாம் அரசியலை முன்னெடுத்து வந்த வேளை 1983ஆம் ஆண்டு எமது கட்சி தடை செய்யப்பட்டது. ஜூலைக் கலவரத்தை அடிப்படையாகக் கொண்டே எமது கட்சி மீது தடை விதிக்கப்பட்டது. அன்று ஏற்பட்ட கறுப்பு ஜூலை என்பது இன்றளவிலும் கறுப்புப் புள்ளியாகவே இருந்து வருகின்றது.

தடையை நீக்குமாறு ஜனாதிபதி முதல் பலரிடம் கோரிக்கை விடுத்தோம். பலன் கிட்டவில்லை. இதற்கிடையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு எமது உறுப்பினர்களை கொன்றொழித்தனர்.

நாட்டை நாசமாக்குகின்ற ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டவேளை, நாடு காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையில் தான் அதற்கு எதிராகவே 1987 மற்றும் 1989களில் எமது வீரமறவர்கள் வீறு கொண்டெழுந்தனர். அவர்கள் கொன்று புதைக்கப்பட்டனர். இவ்வாறு புதைக்கப்பட்டவர்கள் விதைக்கப்பட்டவர்களாக மீண்டெழுந்திருக்கின்றார்கள்.

உண்மையை ஒருபோதும் மூடி மறைக்க முடியாது. உண்மைகள் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.

பட்டலந்த வதை முகாம் கொலையாளிகள், சித்திரைவதை செய்தவர்கள், இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் மலையக மக்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கெல்லாம் நீதி கிடைக்கப்பட வேண்டும்." – என்றார்.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் 128 முறைப்பாடுகள் பதிவாகின




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் 128 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் நேற்று வரை இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வேட்பாளர்கள் 13 பேரும், ஆதரவாளர்கள் 43 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 11 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கும் மிக விரைவில் தீர்வு காணப்படுமாம்

## உறுதி கூறுகின்றார் திலகநாதன் எம்.பி.

(கி.வசந்தன்)

மேய்ச்சல் தரை பிரச்சனைக்கும் விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வனவள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்துடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் நேற்றுக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

விவசாயிகள் தொடர்பாக எமது அரசாங்கம் கவனம் செலுத்தி அவர்களுக்கு சாதகமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேபோல் கால்நடை வளர்பாளர்களுக்கும் மேய்ச்சல் தரை தேவை காணப்படுகின்றது. அதற்காக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வனப்பிரதேசத்தில் மேய்சலில் ஈடுபடுத்துவதற்கும் நாம் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். இதற்கு சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் எதிர்காலத்தில் எமது அரசாங்கம் சிறந்த தீர்வைத் தரும். வன்னி வாழ் மக்கள், தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதன் மூலம் தங்களுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். – என்றார்.





# வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற் செய்கை

(கி.வசந்தன்)

வவுனியாவில் இம்முறை 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

பருவகால மழை, கடந்த வருட இறுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் அவற்றின் நீர் கொள்ளவினை எட்டியுள்ளன.

இதன் காரணமாக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறு போக அளவினை விட இம்முறை ஐயாயிரம் ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோகம் நெற் செய்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன்படி 21 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, சிறுபோக விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார்.



# மத்திய மலைநாட்டில் கன மழை

(மஸ்கெலியா நிருபர்)

நேற்று அதிகாலை முதல் மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கனத்த மழை பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்க பட்டு உளது.

குறிப்பாக சிவனடி பாத மலைக்கு செல்லும் சாலையில் மலை உச்சியில் இருந்து மழை நீர் படிக்கட்டுகளில் அதிகளவில் வடிந்து செல்வதால் சிவனடி பாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் பாரிய சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

அத்துடன் பெருந் தோட்ட தொழிலாளர்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பண்ணையாளர்களும் மிகவும் சிரமத்தை எதிர்கொண்டு உள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர் தங்கள் மாதாந்த வேதனம் பெரும் நாளான நேற்று கன மழை பெய்தமையால் நெருக்கடிகளை எதிர் கொண்டனர்.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதைக் காண கூடியதாக உளது.

குறிப்பாக விமலசுரேந்திர, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல, காசல்ரீ, மவுசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.




# புதுக்குடியிருப்பில் துர்க்கை அம்மன் திருக்குளிர்ச்சி

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீதுர்க்கை அம்மன் தேவஸ்தான வருடாந்த பொங்கல் திருக்குளிர்ச்சி இன்றையதினம் சிறப்புற இடம்பெற இருக்கின்றது.

இன்று வெள்ளி நண்பகல் 12 மணிக்கு பிரதமகுரு விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சதானந்த சசாங்கன் குருக்கள் தலைமையில் உதவிக்குருமார் சிவ சித்தர் பொ. சபாரத்தினம் ஐயா, விஸ்வப்பிரம்ம ஸ்ரீ பிரதீசன் ஐயா, விஸ்வப்பிரம்ம ஸ்ரீ அகிலன் ஐயா ஆகியோரின் உதவியுடன் அம்பாளுக்கு விஷேட அபிடேக ஆராதனையும் பட்டு நேர்தலும் இடம்பெற இருக்கின்றன. அதனை தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட இருக்கின்றது.

தொடர்ந்து இரவு ஏழு மணிக்கு விஷேட பூஜையும், அம்பாள் உள்வீதி உலா வருதலும் இரவு 10 மணிக்கு பண்டமெடுத்தல் நிகழ்வும், இரவு 11 மணிக்கு அணியம் நேர்தல், இரவு 12 மணிக்கு கச்சை நேர்தல், இரவு 2 மணிக்கு வழந்து வைத்தல், இரவு 3.30 மணிக்கு தூளி பிடித்தல், காலை 06 மணிக்கு பரிகலம் வழிவிடுதல் என்பன இடம்பெற இருக்கின்றன.

இன்று இரவு கலைநிகழ்வாக குழுநடனம், தனி நடனமும், தர்மலிங்கம் அண்ணாவியரின் நெறியாள்கையில் “மாலைக்கு வாதாடிய மைந்தன்” எனும் புராண நாடகமும் இடம்பெற இருக்கின்றன.



# மட்டக்களப்பு கரடியனாற்றில் இருந்து செங்கலடிக்கு 20 கிலோ மான் இறைச்சியை கடத்திய இருவர் கைது

(கனகராசா சரவணன்)

கரடியனாறு பிரதேத்தில் இருந்து செங்கலடி பிரதேசத்துக்கு பட்டா ரக சிறிய வானத்தில் 20 கிலோ மான் இறைச்சியைக் கடத்தி சென்ற இருவரை நேற்று வியாழக்கழமை பகல் செங்கலடி கறுத்தப் பாலத்தில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளனர் என்ச் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அந்தொ பாலத்தில் நேற்றுப் பகல் பொலிஸார் கண் காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந் தனர். இதன்போது கரடியனாறு பிர தேசத்தில் இருந்து செங்கலடி பிர தேசத்தை நோக்கி பிரயாணித்த சிறி யரக வாகனத்தை நிறுத்தி சோதனை யிட்டபோது அதில் மறைத்துக் கடத்திக் கொண்டு செல்லப்பட்ட 20 கிலோ மான் இறைச்சியை மீட்டமையுடன் இருவரைக் கைது செய்தனர். கடத்தலுக் குப் பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் செங்க லடி பிள்ளையார் கோவிலடியைச் சோந்த 32 வயதுடையவர் மற்றும் பங்குடாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர்கள் எனவும் இவர் களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்த னர்.

# வீதியில் செல்லும் பெண்களிடம் தொடர்ச்சியாக சங்கிலி அறுத்து வந்த இராணுவச் சிப்பாய் கைது

## நகைகளும் மீட்பு; வவுனியாப் பொலிஸார் நடவடிக்கை

(கி.வசந்தன்)

வவுனியாவின் பல பகுதிகளிலும் வீதியால் செல்கின்ற பெண்களைப் பின் தொடர்ந்து சென்று சங்கிலி அறுத்து வந்தவர் எனக் கூறப்படும் – வவுனியாவில் பணியாற்றும் – இரா ணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுத ிகளிலும் தொடர்ச்சியாக இடம் பெற்ற சங்கிலி அறுப்புச் சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோம முனியின் அறிவுறுத்தலின் கீழ், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயதிலக தலைமை யில் சப் இன்ஸ்பெக்டர் ராஜகுரு, பொலிஸ் சார்ஜண்டுகளான திசா நாயக்க, அசங்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்தக்க, விது சன், பொலிஸ் சாரதி திசாநாயக்க உள்ளிட்ட குழுவின் மேற்கொண்ட நடவடிக்கையின் போது மோட்டர் சைக்கி ளுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அந்த இராணுவச் சிப்பாயிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் பெண் ஒருவரிடம் 1 பவுண் சங்கிலியும், கடந்த ஜனவரி முதலாம் திகதி வேப்பங்குளம், 6 ஆம் ஒழுங்கை பகுதியில் பெண் ஒருவரிடம் 2 பவுண் சங்கிலியும், கடந்த மார்ச் 31 ஆம் திகதி கூமாங்குளம் பகுதியில் பெண் ஒரு வரிடம் 1 பவுண் சங்கிலியும், இம் மாதம் முதலாம் திகதி நெளுக்குளம் பகுதி யில் பெண் ஒருவரிடம் 1 பவுண் சங்கி லியும், இராசேந்திரகுளம் பகுதி யில் பெண் ஒருவரிடம் 1பவுண் சங்கிலி யும் அறுத்திருந்தமை கண்டுபிடிக் கப்பட்டது.

இந்த நபர் கடமை இல்லாத நேரங் களில் சங்கிலி அறுப்பு சம்பவங்க ளுக்குப் பயன்படுத்திய அவரது சொந்த மோட்டர் சைக்கிளும் மீட்கப் பட்டுள்ளதுடன், அறுக்கப்பட்ட சங்கிலி களும் அடைவு வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் பணியாற்றும் மிஹிந்தலையைச் சேர்ந்த 30வயதுடைய இராணுவச் சிப் பாயே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகொ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# யாழ். பிரதம தபாலகத்தில் நேற்றுத் தொடக்கம் 'கற்பகம்' விற்பனை நிலையம் இயங்குகின்றது

(த.சுபேசன்)

பனைசார் உற்பத்திகளின் விற்பனை நிலையமான "கற்பகம்" யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பிரதம தபாலகமும், பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து முதற்தடவையாக இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

திறப்புவிழா நிகழ்வில் அஞ்சல் தலைமையக அஞ்சல்மா அதிபர் பிறேமச்சந்திர ஹேரத், வடமாகாண அஞ்சல்மா அதிபர் திருமதி மது மதி வசந்தகுமார், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன், யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராதா பர்ணாந்து, யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் திருமதி சாந்தகுமாரி மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பா.சுதாகரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் புதிய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி திட்டம் ஊடாக சிறிய அளவிலான பனைசார் விற்பனை மற்றும் உற்பத்தியாளர்கள் நன்மையடைய முடிவதுடன் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான மாதிரிகளை உரிய தர நிர்ணயத்தோடு உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# போதை மாத்திரைகளுடன் இளைஞன் குளப்பிட்டிப் பகுதியில் நேற்றிரவு கைது

யாழ்ப்பாணம் கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை நேற்று இரவு முன்னெடுக்கப்பட்டது.

19 வயதான இந்தச் சந்தேக நபரிடம் இருந்து 94 போதை மாத்திரைகளும் 465 கிராம் கஞ்சா கலந்த மாவாவும் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# பா.ம.க.வுக்கு நானே தலைவர் அன்புமணி செயல் தலைவர்

## ராமதாஸ் அறிவிப்பு

“பா.ம.கவுக்கு இனி நானே நிறுவனராகவும், தலைவராகவும் செயல்படுவேன் அன்புமணி செயல் தலைவராகவும், கவுரவத் தலைவராக ஜி.கே. மணியும் செயல்படுவார்கள்.” என்று ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பா.ம.க. தலைவரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் நேற்று பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அறிக்கை ஒன்றை ராமதாஸ் வாசித்தார். அதில் அவர் குறிப்பிடுகையில்,

“1980 இல் வன்னியர் சங்கம் தொடங்கிய காலத்தில் மருத்துவப் பணியாற்றிக் கொண்டே அரசு பஸ்களில் நின்று கொண்டே சென்று கிராமங்களில் சமூகப் பணியாற்றினேன். அதன் மூலம் மக்களை வென்றுள்ளேன். சிறு மேஜை மீது, மாட்டு வண்டி மீது நின்று பேசிவிட்டு, அடுத்த கிராமத்திற்கு மிதி வண்டியில் சென்று அக்கிராம மக்களிடம் பேசுவேன்.

1987 இல் சாலை மறியல் போராட்டம் நடத்தி 21 பேரை இழந்தேன். 1989 இல் பாமகவை தொடங்கினேன். 95 ஆயிரம் கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்தித்தேன். பின்னர் மிக பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பெற்றேன். கட்சியின் மூலம் மத்திய அமைச்சர் முதல் உள்ளாட்சி பிரதிநிதிவரை பெற்றோம். இவைகள் எல்லாம் என் சாதனைகளாகும்.

பாளையங்கோட்டை மத்திய சிறை தவிர மற்ற மத்திய சிறைகளில் உரிமைகளுக்கான போராட்டத்துக்காக அடைக்கப்பட்டேன். இதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டு பாமகவினரின் வேண்டுதலால் உயிர்பெற்றேன்.

2026 ஆம் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டி பா.ம.க. நிறுவரான நானே தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டு, அன்புமணி செயல் தலைவராக நியமிக்கிறேன். கவுரவத் தலைவராக ஜி.கே. மணி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் செயல்படுவார்கள்.” என்றார்.

ஏற்கெனவே கடந்த டிசம்பர் மாதம், பா.ம.க. சிறப்பு பொதுக்குழுவில் இளைஞரணி தலைவராக ராமதாஸின் பேரன் நியமிக்கப்பட்டதற்கு அன்புமணி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் அவர்களிடையே மேடையிலேயே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ‘கட்சியில் இருக்க இஷ்டம் இல்லாதவர்கள் கிளம்பலாம் இது நான் தொடங்கிய கட்சி’ என ராமதாஸ் ஆவேசமாக தெரிவித்தார். தொடர்ந்து, தனிக் கட்சி அலுவலகம் தொடங்குவதாக அன்புமணி அறிவித்தார்.

இதனால் பா.ம.கவுக்குள் விரிசல் என்ற செய்திகள் வெளியாகின. ஆனால் அது நீர்த்துப் போகும்படி அன்புமணி ராமதாஸ் ‘எங்களுக்கு எல்லாமே தலைவர்தான்’ என்று சொல்லி முடித்தார். இந்நிலையில் தற்போது மீண்டும் ராமதாஸ் இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதற்கு அன்புமணி ராமதாஸ் இன்னும் எதிர்வினையாற்றாத நிலையில் அத்தனை எதிர்பார்ப்பும் அன்புமணி என்ன செய்யப் போகிறார் என்பதில் குவிந்துள்ளது.





# அன்புமணிக்கு ஆதரவாக பா.ம.கவினர் ஆர்ப்பாட்டம்

பா.ம.கவில் உட்கட்சி பூசல் நிலவி வரும் நிலையில், திண்டிவனத்தில் அன்புமணிக்கு ஆதரவாக பா.ம.கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

திண்டிவனத்தில் உள்ள பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் இல்லம் முன்பு நேற்று பிற்பகல் பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் திண்டிவனம் நகரச் செயலாளர் ராஜேஷ் என்பவர் தலைமையில் 33 பேர் ராமதாஸ் தன்னை அக்கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவராகவும் , அன்புமணி ராமதாஸை செயல் தலைவராக அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மீண்டும் அன்புமணி ராமதாஸையே தலைவராக அறிவிக்கக்கோரியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அப்போது விழுப்புரம் பா.ம.க. கிழக்கு மாவட்ட செயலாளர் ஜெயராஜ் தலைமையில் சென்று பா.ம.கவினர் நீங்கள் எதற்காக ஆர்பாட்டம் செய்கிறீர்கள் என கேட்டதால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இத்தகவல் அறிந்த திண்டிவனம் பொலிஸார் சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதால் கலைந்து சென்றனர்.

இந்நிலையில், முன்னாள் நகரச் செயலாளர் ராஜேஷ் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“பாட்டாளி மக்கள் கட்சியின் நிரந்தர தலைவர் அன்புமணி ராமதாஸ் மட்டும்தான். ராமதாஸின் சொல்லை நாங்கள் கேட்டுப்போம். ஆனால் இந்த விஷயத்தில் அவரின் வயது முதிர்வை பயன்படுத்தி சிலர் பின் இருந்து இயக்கி தேவையில்லாத வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இளைஞர்களின் நிலைப்பாடு, நிரந்தர தலைவர் என்றுமே அன்புமணி மட்டும்தான். வேறு யாரையும் நாங்கள் தலைவராக ஏற்றுக் கொள்ள மாட்டோம். தனிப்பட்ட சில சுயநலவாதிகளினுடைய சூழ்ச்சிதான் இது. வேறு ஒன்றுமே இல்லை. என்றைக்குமே அன்புமணி தான் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர்.” என்றார்.



## இராமநாதபுரத்தில் 2,000 விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாது

# ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் மீன்பிடிக்கத் தடைக்காலம்

தமிழகத்தில் இரண்டு மாத கால மீன்பிடித் தடைக்காலம் எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜல சந்தி கடற்பகுதிகளில் ஏப்ரல், மே, ஜுன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலமாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது.

மீன்வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்தக் காலகட்டத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. அதன்படி தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான 61 நாள் மீன்பிடித் தடைக்காலம் ஏப்ரல் 15 ஆம் திகதி அமலுக்கு வருகிறது. ஜுன் 14 வரை 61 நாள்களுக்கு இந்த தடை அமலில் இருக்கும்.

இதுகுறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் கலோன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 இன் கீழ், தமிழகத்தின் கிழக்கு கடற்பகுதியில் மீன் இனப்பெருக்க காலத்தை கருத்திற்கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டும், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலான இரண்டு மாத காலங்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளை உபயோகப்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்படுகிறது. அதன்படி விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மேற்கூறிய காலகட்டங்களில் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லக் கூடாது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா ஊடாக பங்களாதேஷ் பொருள்களை ஏற்றுமதி செய்ய இந்திய அரசால் தடை விதிப்பு



இந்தியத் துறைமுகம், விமான நிலையம் மற்றும் சுங்கத் திணைக் களம் ஊடாக பங்களாதேஷ் பொருள்கள் கொண்டு செல்லும் அனுமதியை இந்திய அரசாங்கம் நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்தியா வழியாகப் பொருள் களைக் கொண்டு செல்லும் போது மூன்றாம் தரப்பு நாடுகளுக்கு நுழை யும் வாய்ப்பினூடாக பொருள்கள் பரி மாற்றம் செய்யும் வசதிகளை இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது.

2020 ஆம் ஆண்டில் அறி முகப்படுத்தப்பட்ட இந்த வசதிகளால் தலைநகரான டாக்காவிலிருந்து நேபாளம், பூட்டான், மியன்மார் ஆகிய அண்மை நாடுகளுக்கு ஏற்றுமதி பொருள்களை பங்களாதேஷ் இலகு வாகக் கொண்டு சென்றது.

இந்நிலையிலேயே இந்த வசதி களை நிறுத்துவதாக இந்திய மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கத் திணைக்களம் சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே போக்குவரத்தில் உள்ள பொருட்கள் முந்தைய நடைமுறையின் கீழ் இந்தியப் பகுதியை விட்டு வெளி யேற அனுமதிக்கப்படும் எனவும், இனி வரும் பொருள்களுக்கே இந்த தடை அமுல்படுத்தப்படும் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.



# ஷேக் ஹசீனாவுக்கு பிடியாணை பிறப்பிப்பு

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் அவரது மகள் சைமா வாஜேத் புதுல் உள்ளிட்ட 17 பேருக்கு எதிராகக் குடியிருப்பு நிலத் தைக் கையகப்படுத்தியமை தொடர்பான ஊழல் வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் போராட்டம் காரணமாக பங்க ளாதேஷ் பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக பங்களாதேஷ் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித் துள்ளது.

இதனையடுத்து ஷேக் ஹசீனாவை தங்களிடம் ஒப்படைக்குமாறு பங்களாதேஷ் இடைக்கால அரசு, இந்தியாவிடம் கோரிக்கை வைத்துள்ளது.

இந்நிலையில், ஷேக் ஹசீனா , மகள் சைமா வாஜெத் புதுலு ஆகியோர் மீது அந்நாட்டின் ஊழல் தடுப்பு ஆணைக்குழு சட்டவிரோதமாகக் குடியிருப்பு நிலத்தைக் கையகப்படுத்தினர் என குற்றம்சாட்டியது.

இருவரும் தலைமறைவாக இருப்பதாக, ஊழல் தடுப்பு ஆணைக்குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இதனை ஏற்றுக் கொண்ட டாக்கா சிறப்பு நீதிமன்றம் இருவருக்கும் எதிராகப் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டது.

மேலும், இது தொடர்பான குற்றச்சாட்டை விசாரிக்க, மே மாதம் 4 ஆம் திகதி விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

### உக்ரைக்கு நன்கொடை அளித்த குற்றச்சாட்டில்

# சிறை சென்ற பெண் விடுதலை

உக்ரைன் தொண்டு நிறு வனத்திற்கு நன்கொடை அளித் ததற்காக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த பெண் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள் ளார்.

அமெரிக்க – ரஷ்ய கைதிகள் பரிமாற்றத்தில் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இந்தப் பெண் கடந்த வரு டம் ரஷ்யாவின் யெகடெரின் பர்க் நகரில் வைத்துக் கைது செய் யப்பட்டார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதி யினை வசிப்பிடமாகக் கொண்ட சேனியா கரேலினா என்ற பெண்ணே கைது செய்யப்பட்டி ருந்தார்

உக்ரைனுக்கு மனிதாபி மான உதவி வழங்கும் அமெ ரிக்காவைத் தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு நன்கொடை வழங்கியமைக் காக இவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக் கப்பட்டிருந்தது.

எனினும் கைதிகள் பரிமாற் றத்தில் இவர் விடுதலை செய் யப்பட்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை அபுதாபி யில் கைதிகள் பரிமாற்றம் நடை பெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தலை யீட்டின் பேரில் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என தெரி விக்கப்படுகிறது.



# இன்றைய ராசி பலன்கள் - 11.04.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்துக் கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்..




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.04.2025




இன்று சிறிது சோம்பலுடன் காணப் படுவீர்கள். மனதில் குழப்பம் காணப படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகி யிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக் கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளி தில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற் றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள் வீர்கள்.அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர் கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப் படுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளி தாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதி கரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறு மையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும்.



# வவுனியாவில் மரம் கடத்திய வாகனத்தை விரட்டிப் பிடித்த பூவரசன்குளம் பொலிஸ்

வவுனியாவில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை பொலிஸாட் விரட்டிப் பிடித்தனர். அதில் இருந்த இருவர் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பி ஓடிச் சென்றுள்ளனர் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, பூவரசன்குளம் பொலி ஸார் காலை வீதிச் சோதனை நடவ டிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவ்வீதி வழியாக வவுனியா நோக்கி வந்த பிக்கப் ரக வாகனம் ஒன்றை மறித்தபோது அது நிறுத் தாமல் தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து அந்த வாகனத் தைப் பூவரசன்குளம் பொலிஸார் விரட் டிச் சென்றனர். வாகனம் வவுனியா, விநாயகபுரம் பகுதியில் வேகமாகச் சென்று கொண்டு இருந்த போது சாரதி யின் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளானதும், அதன் சாரதி யும் அதில் இருந்த மற்றைய நபரும் தப்பி ஓடினர்.5 லட்சம் ரூபா பெறு மதியான முதிரை மரக்குற்றிகளுடன் அந்த வாகனம் பொலிஸாரால் கைப் பட்டுள்ளது. வாகன சாரதி மற்றும் அதில் பயணித்தவரைக் கைது செய்வதற் கான நடவடிக்கைகள் இடம்பெறுகின் றன என பூவரசன்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.